**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 19 June 2015

## சிங்கப்பூர்–இந்தியா உறவு பற்றி கோ சோக் டோங்

# தனிச்சிறப்பு மிக்கது

சிங்கப்பூருக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு மிகவும் முக்கியம் வாய்ந்தது என்று ஒய்வுபெற்ற கௌரவ மூத்த அமைச்சர் கோ சோக் டோங் தெரிவித்துள்ளார்.

தேசிய பல்கலைக்கழகத்தின் என்யுஎஸ்எஸ் கில்ட் ஹாலில் 'சிங்கப்பூர்–இந்தியா: பொதுவான எதிர்காலத்தை நோக்கி' எனும் தலைப்பிலான நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகத் திரு கோ கலந்துகொண்டு செய்தியாளர்களிடம் பேசினார்.

"நான் பிரமராக இருந்தபோது, இந்தியாவின் ஆற்றல்களை உணர்ந்தேன். வர்த்தகம், முதலீடுகள், கலாசார உறவுகள் போன்ற பற்பல ஆற்றல்களைக் கொண்டிருக்கும் இந்தியாவுடன் சிங்கப்பூரின் உறவு வலுப்பட வேண்டும் என்று பல முயற்சிகளை மேற்கொண்டேன். அதன் மூலம் இரு நாடுகளும் பலன் அடைய முடியும்.

"இந்தியாவின் இப்போதைய பிரதமர் மோடி, பல நாடுகளுக்குச் சென்று அனைத்துலக நாடுகளுடனான இந்தியாவின் உறவை வலுப்படுத்துவதுடன் முதலீடுகளையும் பெற முயன்று வருகிறார். அந்த வகையில் சிங்கப்பூர்–இந்தியா உறவு மிகவும் தனிச்சிறப்பு மிக்கது. ஆக, இந்திய நாட்டவர்களை நாங்கள் வரவேற்கிறோம்.




நூல் வெளியீட்டு விழாவில் (இடமிருந்து வலம்) ஒய்வுபெற்ற கௌரவ மூத்த அமைச்சர் கோ சோக் டோங்குடன் சிங்கப்பூருக்கான இந்தியத் தூதர் திருமதி விஜய் தாக்கூர் சிங் மற்றும் தெற்காசிய கல்வி ஆய்வுக் கழகத்தின் தலைவர் திரு கோபிநாத் பிள்ளை. **படம்: திமத்தி டேவிட்**

வர்த்தகத் துறையில் மட்டுமல்லாமல், கலாசாரத் துறை சார்ந்தவர்களும் இதர துறை சார்ந்தவர்களும் சிங்கப்பூர் மக்களுடன் கலந்துறவாடி இரு நாட்டு உறவை மேன்மேலும் வலுவடைய செய்ய வேண்டும்.

"அந்தத் திசையிலேயே தெற்காசிய கல்வி ஆய்வுக் கழகமும் சென்று இரு நாட்டு உறவைப் பலப்படுத்த பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது," என்றார் திரு கோ.

"இந்தியாவின் வளர்ச்சி தொடர்ந்து அதிகரிக்கும். இப்போதிலிருந்து அது எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் அதன் பொருளியலைப் பெருக்கும் வகையில் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்," என்றும் குறிப்பிட்டார் திரு கோ. ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகர் திட்டத்தில் சிங்கப்பூர் முக்கிய பங்கு வகித்து வருவதைத் திரு கோ சுட்டினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.